25 ஆவது ஆண்டு • 25 th Anniversary

தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**

# இயல் விருது விழா 2024

Lifetime Achievement Award Ceremony 2024

October 04, 2025

## தமிழ் இலக்கியத் தோட்டம் - Tamil Literary Garden

கனேடிய தமிழ் இலக்கியத் தோட்டம், கல்வியாளர்கள், எழுத்தாளர்கள், வாசகர்கள், விமர்சகர்கள், கொடையாளர்கள் ஆகியவர்களின் ஆதரவுடன் 2001ம் ஆண்டு ரொறொன்ரோவில், உலகமெங்கும் பரந்திருக்கும் தமிழை வளர்ப்பதற்காக ஆரம்பிக்கப்பட்ட அறக்கட்டளையாகும். அரிய தமிழ் நூல்களை மீள் பதிப்பு செய்வது, தமிழ், ஆங்கில நூல்களின் மொழிபெயர்ப்பை ஊக்குவிப்பது, மாணவர் கல்விக்கு புலமைப் பரிசில் வழங்குவது, தமிழ் பட்டறைகள் ஒழுங்கு செய்வது, கனேடிய நூலகங்களுக்கு இலவசமாக தமிழ் நூல்கள் அளிப்பது போன்ற சேவைகள் இதனுள் அடங்கும். இந்த இயக்கத்தின் முக்கியமான பணி வருடா வருடம் உலகத்தின் மேன்மையான தமிழ் இலக்கிய சேவையாளர் ஒருத்தருக்கு வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனை விருது வழங்கிக் கௌரவிப்பதாகும். இயல் விருது என்றழைக்கப்படும் இந்த விருது, பாராட்டுக் கேடயமும் 2500 டொலர்கள் பணப்பரிசும் கொண்டது.

புனைவு, அல்புனைவு, கவிதை, தமிழ் தகவல் தொழில் நுட்பம், மொழிபெயர்ப்பு ஆகிய துறைகளிலும் வருடா வருடம் பரிசுகள் வழங்கப்படுகின்றன.
பல்கலைக்கழகத்தில் தமிழ் கற்கும் சிறந்த மாணவருக்கு ஆயிரம் டொலர் புலமைப் பரிசிலும் உண்டு. வருடாவருடம் ரொறொன்ரோ பல்கலைக் கழகத்துடன் இணைந்து தமிழ் இலக்கியத் தோட்டம் தமிழ் அறிஞர்களின் விரிவுரைகளுக்கும் ஏற்பாடு செய்கிறது. அத்துடன் மறக்கப்பட்ட நிலையில் உள்ள நாட்டுக்கூத்து போன்ற கலைகளுக்கு புத்துயிரூட்டும் முயற்சியிலும் ஈடுபட்டு வருகிறது.

Founded in 2001, the Tamil Literary Garden is a Toronto based charitable organization committed to promoting the development of literature and studies in Tamil internationally. Its mandate includes awards, creative writing, scholarship to students, translations, book releases, Tamil theatre performances, conferences and workshops. It recognizes that despite the richness and significance of contemporary writing, very little has been done to promote or to celebrate the authors who have made major contributions to Tamil. Among its activities, the event that takes centre stage is a Lifetime Achievement Award, given annually to a writer, scholar, critic or editor, who over a period of time has made very significant contribution to the growth or study of Tamil literature. The Lifetime Achievement Award ( also known as Iyal Virudhu ) consists of a plaque and a cash prize of C$2500.

The Tamil Literary Garden also has instituted other awards: Awards for Fiction, Non-fiction, Poetry, Information Technology in Tamil, Translation and Scholarship to an undergraduate enrolled in a Tamil studies program. It also organizes Tamil Theatre performances (Naddu Koothu) and lecture series in conjunction with the Department of English - University of Toronto.

Tamil Literary Garden
76, Legacy Drive
Markham, ON L3S 4B5
Canada
Tel: 905 201 9547
Email:appatlg@gmail.com
Web: www.tamilliterarygarden.com

25 ஆவது ஆண்டு • 25 th Anniversary

25 ஆவது ஆண்டு · 25 th Anniversary

தமிழ் இலக்கியத் தோட்டம்
**Tamil Literary Garden**



Prof. Chelva Kanaganayakam
Past President



Dr Vijay Janakiraman
Patron



Prof. A. J. V. Chandrakanthan
Patron

## Board of Directors



Manuel Jesudasan
Barrister & Solicitor
President



Appadurai Muttulingam
Writer
Director



N.K. Mahalingam
Writer/ Translator
Treasurer



Selvam Arulanandam
Editor/ Writer
Director



Dr R Cheran
Poet, Academic, Writer
Director



Thirumurthi Ranganathan
(CEO, Digital Maxim)
Director



Sivan Ilangko, FCPA, FCA
Director



Raja Mahendran
Broker/ Owner Homelife GTA
Director



S.J. Ramprashan
Program Manager, CMR
Secretary

25 ஆவது ஆண்டு • 25 th Anniversary

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

## Advisory Board for Awards Panel

**V.N. Giritharan**
*Writer - Canada*
**R. Cheran**
*Professor, University of Windsor - Canada*
**A.R. Venkatachalapathy**
*Professor, Madras Institute of Development Studies - India*
**V. Arasu**
*Professor, Writer , Researcher*
**Aravindan**
*Writer - India*
**P.A. Krishnan**
*Writer - India*
**Ambai (Dr C. S. Lakshmi)**
*Writer - India*
**Sitralega Maunaguru**
*Professor, Sri Lanka*
**George L. Hart**
*Professor , USA*
**Jayanthi Sankar**
*Writer - Singapore*
**P. Karunaharamoorthy**
*Writer - Germany*
**L.Murugapoopathy**
*Writer - Australia*
**P.Ahilan**
*Senior Lecturer, University of Jaffna - SriLanka*
**Professor R. S. Sugirtharajah**
*U. K*
**M. Pushparajan**
*Writet, poet, U. K*
**A. Kanthasamy**
*Writer, Canada*
**Yuvan Chandrasekar**
*Writer – India*
**Gnanam Lambert**
*Canada*
**P.Wikneswaran**
*Writer, Canada*
**Maalan Narayanan**
*Writer, India*
**Sukumaran**
*Poet, India*

25 ஆவது ஆண்டு • 25 th Anniversary

# இயல் விருது விழா 2024

## Lifetime Achievement Award Ceremony 2024

October 04, 2025



## Chief Guest

**Juanita Nathan** is the Member of Parliament for Pickering–Brooklin and a lifelong advocate for equity, education, and community empowerment. Born in Sri Lanka and raised in Canada, Juanita's journey from newcomer to national leadership reflects her deep commitment to public service and grassroots change.

She is the first female of Tamil-Canadian heritage elected to public office in Canada, and has continued to break new ground throughout her career.
In addition to a BA in Psychology from Brock University, she holds an MA in Tamil Literature and an MA in Linguistics from Annamalai University, highlighting her passion for language, culture, and education.

Her career in social services spans decades, supporting survivors of domestic violence, mentoring youth, and helping families overcome systemic barriers. She served three terms as a Public School Board Trustee and was elected Chair of the York Region District School Board, the first Tamil-origin Chair of any school board in Canada. She later served as Markham's Ward 7 Councillor before being elected to Parliament.

A proud recipient of the Queen Elizabeth II Platinum Jubilee Medal, Juanita has worked with a variety of not-for-profit organizations and has served on several of these boards. As MP, she continues to champion inclusive, community-rooted policy, and is honoured to celebrate Tamil language, literature, and cultural excellence.




## Guest of Honour


**Swarnavel Eswaran** is a Professor in the Department of English and the School of Journalism at Michigan State University, where he teaches film history, theory, and production. He graduated from the Film and Television Institute of India and the University of Iowa. His documentaries include Nagapattinam: Waves from the Deep (2018), Hmong Memories at the Crossroad (2016), Migrations of Islam (2014), and Unfinished Journey: A City in Transition (2012). His research focuses on the history, aesthetics, politics, and contemporary digital cinema of Tamil and Indian cinema, as well as the concomitant changes. His essays have appeared in Screen, Jump Cut, South Asian Popular Culture, and Caste: A Global Journal on Social Exclusion. His books include Tamil Cinema Reviews: 1931-1960 (Nizhal, 2020) and Madras Studios: Narrative, Genre, and Ideology in Tamil Cinema (Sage Publications, 2015). His fiction feature Kattumaram(Catamaran, 2019) has been screened at over fifty international film festivals, including Frameline, InsideOut, and Kashish.

# AWARD RECIPIENTS FOR 2024

## Lifetime Achievement Award

Recipient:
**Satchithananthan Sugirtharajah**
இயல் விருது





Recipient:
**Yuvan Chandrasekar**
இயல் விருது



### Fiction Award

Recipient: **Ravi Arunachalam**
புனைவு: பம்பாய் சைக்கிள்



### Nonfiction Award

Recipient: **T. Pitchandi**
அல்புனைவு: எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர் நினைவுகள்



### Poetry Award

Recipient: **Ravi Subramaniyan**
கவிதை விருது: அருகிருக்கும் தனியன்



### Poetry Award

Recipient: **Riyaza M.Zawahir**
கவிதை விருது: நிலங்களின் வாசம்



### Translation Award

Recipient: **Nedra Rodrigo**
மொழிபெயர்ப்பு விருது: **Prison of Dreams (5 parts)**



# இயல் விருது

**சச்சிதானந்தன் சுகிர்தராஜா**

Lifetime Achievement Award

**Recipient: Satchithananthan Sugirtharajah**

சச்சிதானந்தன் சுகிர்தராஜா இலங்கையில் பிறந்தவர். உயர்கல்விக்காக இங்கிலாந்து சென்று கடந்த முப்பது ஆண்டுகளாக அங்கேயே கல்விசார் சூழலில் வாழ்ந்து வருகிறார்.

பேர்மிங்ஹும் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராகப் பணி புரிந்து, இப்போது தகைசால் ஓய்வுநிலைப் பேராசிரியராக இருக்கிறார். பின் காலனியத்துவ கருதுகோளை உபயோகித்து காலனிய, பின் காலனிய காலத்தில் எவ்வாறு திருப்பிரதிகள் கையாளப்பட்டன என்பது பற்றி ஆங்கிலத்தில் இவர் எழுதிய இருபதுக்கும் மேற்பட்ட நூல்களும், தொகுப்புகளும் இதுவரை வெளிவந்திருக்கின்றன. பேர்மிங்ஹும் பல்கலைக் கழகம் இவரின் ஆக்கங்களின் சிறப்பை அங்கீகரித்துத் தனிப் பேராசிரியர் இருக்கையை (Personal Professorial Chair) வழங்கி இவருக்கு மதிப்பளித்தது. இவரின் தமிழ் எழுத்துகள் எண்பதுகளில் கணையாழியில் பிரசுரமாயின. இவருடைய சிறுகதைத் தொகுப்பு 'அ/சாதாரண மனிதன்' (2008) காலச்சுவடு பிரசுரமாக வெளிவந்திருக்கிறது. தொடர்ச்சியாகத் தமிழில் கட்டுரைகள் எழுதி வருகிறார். தமிழ் மரபும், பண்பாடும், மொழியும், உவந்தளித்த பொற்கனி சச்சிதானந்தன் சுகிர்தராஜா.


**இவரது தமிழ் நூல்கள்:**

அ/சாதாரண மனிதன் (காலச்சுவடு,2008)
யூதர்கள் சைவர்களான கதை (என்.சி.பி.எச்,2023)
ஆசியாவை அசத்த முயன்ற பொதுவுடமைவாதிகள் (என்.சி.பி.எச், 2023)
நான் தடுப்பூசி குத்தப்போனேன் (என்.சி.பி.எச், 2021)
கலாச்சாரக் கவனிப்புகள் (காலச்சுவடு, 2021)
நூல்கள், நூலகங்கள், நூலகர்கள். (காலச்சுவடு, 2021)
பண்பாட்டுப் பொற்கனிகள் (காலச்சுவடு 2010)

**ஆங்கிலத்தில் இவரது நூல்கள்:**

• Jesus in Asia, Harvard University Press, 2018
• The Brahmin and his Bible: Rammohun Roy's Precept's of Jesus 200 years on, T&T Clark, Bloomsbury, 2019.
• Exploring Postcolonial biblical Criticism: History, Method, Practice. Wiley-Blackwell, Oxford, 2012.
• Troublesome Texts: The Bible in Colonial and Contemporary Culture, Sheffield: Phoenix Press, 2008.
• The Bible and Empire: Postcolonial Explorations, Cambridge University Press, Cambridge, 2005.
• Postcolonial Reconfigurations: An Alternative way of reading the Bible and doing theology, SCM Press, London, 2003. American edition: Chalice Press.
• Postcolonial Criticism and Biblical Interpretation, Oxford University Press, Oxford, 2002.
• The Bible and the Third World: Precolonial, Colonial and Postcolonial Encounters, Cambridge University Press, Cambridge, 2001.
• Asian Biblical Hermeneutics and Post colonialism: Contesting the Interpretations, Orbis Books, Maryknoll, NY., 1998
• Hindus and their Christian Bible ( Bloomsbury, 2024)

2024ம் ஆண்டுக்கான இயல் விருதை சச்சிதானந்தன் சுகிர்தராஜா அவர்களுக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமகிழ்வடைகிறது.



# இயல் விருது

## யுவன் சந்திரசேகர்

Lifetime Achievement Award
**Recipient: Yuvan Chandrasekar**

நவீனத் தமிழ் இலக்கியத்தில் 1990களின் தொடக்கத்தில் உருவான புதுப் பிரக்ஞையின் அடையாளங்களில் ஒருவர் யுவன் சந்திரசேகர். பின் நவீனத்துவம் என்று அழைக்கப்பட்ட இந்தப் புதிய நடைமுறையில் தனித்துவமான எழுத்து வகைமையை உருவாக்கியவர். மீண்டு வந்த இயல்புவாத ஆக்கங்களுக்கும் நவீனத்தைக் கடந்த சொல்லாடல்களுக்கும் அப்பாற்பட்ட புனைவுமுறையை முன்வைத்தார்.

எம்.யுவன் என்ற பெயரில் கவிதைகளும், யுவன் சந்திரசேகர் என்ற பெயரில் புனைவுகளையும் படைக்கும் ஆர். சந்திரசேகரன், மதுரை மாவட்டம் சோழவந்தானை அடுத்துள்ள கரட்டுப்பட்டி என்ற சிறு கிராமத்தில் 1961 ம் ஆண்டு பிறந்தார். பள்ளிப் படிப்பை மதுரையிலும், வணிகவியல் இளங்கலைப்படிப்பை அமெரிக்கன் கல்லூரியிலும் பயின்றார். பாரத ஸ்டேட் வங்கியில் நீண்ட காலம் பணியாற்றி 2018 இல் விருப்ப ஓய்வு பெற்றார். மனைவி உஷாவுடன் சென்னையில் வசிக்கிறார். மகன் அரவிந்தன், மனைவி மகனுடன் கனடாவிலும், மகள் மீரா, கணவர், மகனுடன் மும்பையிலும் வாழ்கிறார்கள்.

கடந்த முப்பத்தைந்து ஆண்டுகளுக்கும் மேலாக யுவன் சந்திரசேகர், நவீன இலக்கியச் சூழலில் செயல்பட்டு வருகிறார். மிகுந்த எச்சரிக்கையுணர்வைக் கோரும் வங்கிப் பணிக்கிடையில் இவர் உருவாக்கியுள்ள படைப்புலகம் வியப்பளிக்கும் அளவுக்குப் பரந்தது. இவரது படைப்புக் குவை ஆறு கவிதைத் தொகுப்புகள், ஒன்பது சிறுகதைத் தொகுப்புகள், இரண்டு குறுங்கதைத் தொகுப்புகள், பதினொரு நாவல்கள், ஆறு மொழியாக்கங்கள், இரண்டு கட்டுரை நூல்கள் ஆகியவற்றை உள்ளடக்கியது. 'வங்கியில் அந்த நாளைய என் பணி முடிந்த மறு நொடியே நான் எழுத்தாளன் ஆகிவிடுவேன். என் அக உலகின் ஆளுகைக்கு ஆட்பட்டு விடுவேன்' என்று தனது இலக்கிய இருப்பைச் சொல்லும் இவர் 'என்னை நானே அடைவதற்கான வழிதான் என் எழுத்து' என்கிறார். இந்த வாசகமே இவரது படைப்பின் ஊற்றுக் கண்.

தனது இலக்கிய முயற்சிகளை இவர் கவிதையெழுத்தில் தொடங்கினார். கவிதையிலிருந்து நீட்சி பெற்ற அனுபவங்களைச் சொல்லவும், கவிதை வடிவத்தின் போதாமையிலிருந்து விடுபட்டு விரிந்த களத்தில் செயல்படவும், புனைவைத் தேர்ந்தெடுத்ததாகச் சொல்கிறார். இவரது கவிதைகள் புழக்கத்திலிருந்த கவிமொழியிலிருந்து மாறுபட்டவை. பொதுவான பேசுபொருள்களிலிருந்து வேறுபட்டவை. தருக்கத்தை உணர்வாகவும், உணர்வைத் தருக்கமாகவும் மாற்றும் ரசவாதத்தை இவரது கவிதைகள் நிகழ்த்துகின்றன. அவை புதிரின் மாயச் சிடுக்கை விளங்கிக்கொள்ளவும், விளக்கவும் முற்படுபவை. கவிதையிலிருந்து பெற்ற இந்த மாயத் தூண்டுதலை யுவன் சந்திரசேகரின் புனைவுகளிலும் காணலாம். தமிழில் இதுவரை எழுதப்பட்ட பொதுக் கதையாடல்களுக்கு முற்றிலும் மாறான இயல்பைக் கொண்டவை இவரது புனைவுகள். அறியப்படும் ஒன்றின் பின்னால் உள்ள அறியப்படாத உண்மையையும், உணர்வையும் கண்டடைவதே இவரது புனைவுமுறை. மாற்றுமெய்மை என்று அதைக் குறிப்பிடுகிறார் இவர்.

யுவன் சந்திரசேகர் சரளமான எழுத்தாளர். நிறைய எழுதியிருப்பவர். எழுதி வருபவர். எனினும் இந்த ஆக்கங்கள் வாசக ருசிக்காகச் சமைக்கப்பட்டவை அல்ல. நவீன இலக்கியப் பரப்பில் தமக்கான தனியிடத்தைக் கோருபவை. வாசகரிடம் மேலதிக விழிப்பை வலியுறுத்துபவை. அன்றாட எதார்த்தங்களுக்கு உள்ளும் அப்பாலும் இருக்கும் மெய்மைகளைத் தேடுபவை. அந்தத் தேடலில் வாசகரையும் ஈடுபடுத்துபவை. எனினும் வாசிப்பில் நிறைவளிப்பவை. இவரது எந்தப் படைப்பும் வாசிப்பில் சோடை போகாதவை.

யுவன் சந்திரசேகரின் நாவல்களில் பயணக் கதை, வெளியேற்றம், குள்ளச்சித்தன் சரித்திரம், எதிர்க்கரை ஆகியவை மெல்லிய ஆன்மீகச் சாயலைக் கொண்டவை. மனிதர்கள் தம் இருப்பைச் சார்ந்து நடத்தும் விசாரணை-களைப் பின்தொடர்பவை. வாசகரிடமும் அந்த வேட்கையை ஏற்படுத்துபவை. அதற்காகப் படைப்பில் ஆழ அழைப்பவை. இவர் முன்வைக்கும் ஆன்மீகம், உலகத்தைத் துறந்தது அல்ல உலகியல் உழற்சியில் பிறப்பது.

இசையில், குறிப்பாக ஹிந்துஸ்தானி இசையில் மிகுந்த ஈடுபாடு கொண்டவர். அதன் பயனாக, ஹிந்துஸ்தானி இசையுலகப் பின்னணியில் இவர் எழுதிய மூன்று நாவல்களான , கானல் நதி, நினைவுதிர் காலம், ஆறு தாரகைகள் ஆகியவை தமிழுக்குக் கிடைத்த அரிய படைப்புகள். கவிதை, சிறுகதை, நாவல் ஆகிய வகைமை-களில் ஈடுபட்டுள்ள யுவன் சந்திரசேகர் மொழியாக்கத்திலும் தனது கைவண்ணத்தைப் பதித்திருக்கிறார். உலக இலக்கியத்தில் கவனம்பெற்ற சிறுகதைகள், நாவல்களைத் தமிழாக்கம் செய்திருக்கிறார். இவரது ஜென் கவிதைகளின் தொகுப்பு 'பெயரற்ற யாத்ரீகன்', தமிழ்க் கவிதைக்கு வாய்த்த நற்கொடை.

நவீனத் தமிழ் இலக்கியத்தின் வெவ்வேறு வகைமைகளிலும் தனது தனித்துவம் மிகுந்த படைப்பாற்றலால் மொழிக்குப் பெருமை சேர்க்கும் வகையில் பல பத்தாண்டுகளுக்கும் மேலாகப் பங்களித்து வரும் யுவன் சந்திரசேகரைப் பாராட்டி, கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் 2024ம் ஆண்டுக்கான, வாழ்நாள் சாதனைக்குரிய இயல் விருதை அவருக்கு வழங்குவதில் பெருமை கொள்கிறது.



**இரவி அருணாசலம்**
புனைவுப் பரிசு

**பம்பாய் சைக்கிள்**

Fiction Award
**Ravi Arunachalam**

இரவி அருணாசலம் யாழ்ப்பாணம், அளவெட்டியைச் சேர்ந்த ஆசிரியர், கலைஞர். இவரது தந்தை அருணாசலம், தாய் பரமேஸ்வரி. அளவெட்டி தெல்லிப்பளை மகாஜனாக் கல்லூரியில் கல்வி கற்ற இவர், யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில் தமிழ்த்துறையில் சிறப்புக் கலைமாணிப் பட்டத்தையும், கொழும்புப் பல்கலைக்கழகத்தில் கல்வியியல் துறையில் டிப்ளோமாப் பட்டத்தையும் பெற்றுள்ளார். இவர் யாழ்ப்பாணத்திலும், கொழும்பிலும் ஆசிரியராக 1987 – 1996 வரையான ஆண்டுகளில் கடமையாற்றினார்.

இவர், கொழும்பிலிருந்து வெளிவந்த சரிநிகர், இலண்டனிலிருந்து வெளிவந்த புலம், ஒரு பேப்பர் ஆகிய சஞ்சிகைகளின் ஆசிரியர் குழுவில் பணியாற்றியிருக்கிறார். அத்துடன் ஐ.பி.சி. தமிழ் வானொலி, தமிழ் தொலைக்காட்சி இணையம், ஐ.பி.சி. தமிழ் தொலைக்காட்சி ஆகியவற்றில் நிகழ்ச்சித் தயாரிப்பாளராகவும் இருந்துள்ளார். இவர் யாழ்ப்பாணம் நாடக அரங்கக் கல்லூரி, யாழ் பல்கலைக்கழகக் கலாச்சாரக்குழு, கொழும்பு அரங்காடிகள், இலண்டன் அரங்கத்தாடிகள் ஆகிய நாடகக் குழுக்களுடன் இணைந்து பதினைந்து நாடகங்களுக்கு மேல் நெறியாள்கை செய்தும் நடித்தும் இருக்கின்றார். நூற்றுக்கு மேற்பட்ட தடவை மேடை ஏறி உள்ளார். சினிமாவிலும் ஆர்வமுள்ளவர்.

’காலம் ஆகி வந்த கதை’, ‘பாலைகள் நூறு’ (சிறுகதைத் தொகுப்பு), “வீடு நெடும் தூரம்” (அரசியல் புதினம்), “ஆயுதவரி“ (குறுநாவல்கள்), “1958“ (நெடுங்கதை), ‘PKM என்கிற புகையிரத நிலையம்’, ‘பம்பாய் சைக்கிள்’ ஆகியவை இவரது நூல்கள்.

இந்திய அமைதி காக்கும் படை இலங்கையில் புகுந்து வெளியேறிய நாள்வரை ஈழத்தின் மண்ணுக்கும், மக்களுக்கும் இழைக்கப்பட்ட இன்னல்களையும், துயரத்தையும் சித்தரிக்கும் முக்கியமான படைப்பு ‘பம்பாய் சைக்கிள்.’ இந்தியாவை பல நூறு வருடங்களாக நட்பு நாடாகக் கருதி வந்த ஈழத்து மக்களின் எண்ணம் இதன் பிறகு முற்றிலும் மாறியதை விவரிக்கும் இந்த நூலில் புனைவும் வரலாறும் பின்னிப் பிணைந்து வாசிப்பை சுவாரஸ்யமாக்குகிறது.

இவருடைய 30 வருடகால தமிழ்ச் சேவையை பாராட்டுவதுடன் இவர் படைத்த ‘பம்பாய் சைக்கிள்’ நூலுக்கு 2024ம் ஆண்டுக்கான புனைவுப் பரிசை வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## த.பிச்சாண்டி

**அல்புனைவுப் பரிசு**

### எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர் நினைவுகள்

**Nonfiction Award**

## T. Pitchandi

நூலாசிரியர் த. பிச்சாண்டி, திருவண்ணாமலை அருகிலுள்ள பள்ளி கொண்டாப்பட்டு எனும் சிறு கிராமத்தில் பிறந்தார். இவரது பெற்றோர் விவசாயக் குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். சிறுவயதிலேயே தந்தையை இழந்து வறுமையில் வளர்ந்தாலும், தன் விடா முயற்சியால் கணிதத்தில் இளங்கலை, முதுகலைப் பட்டங்களை சென்னை அரசுக் கல்லூரியிலும், இலயோலா கல்லூரியிலும் படித்துப் பெற்றார். தமிழ் ஆர்வத்தால் தொடர்ந்து இலக்கியங்களையும் கற்றார்.

1973ம் ஆண்டு துணைக் கலெக்டராக அரசுப் பணியில் சேர்ந்து பின்னர் இந்திய ஆட்சிப் பணிக்குத் தேர்வாகி திண்டுக்கல் மற்றும் நீலகிரி மாவட்டங்களில் ஆட்சித் தலைவராகப் பொறுப்பேற்றார். திண்டுக்கல்லில் பணியாற்றியபோது தமிழ்நாடு முதலமைச்சர் எம்.ஜி.ஆர் அவர்களை நேரில் சந்திக்கும் வாய்ப்பு கிடைத்தது. இவரது நேர்மையையும், பணித்திறனையும் அறிந்த எம்.ஜி.ஆர் அவர்கள் இவரைத் தனது நேர்முக உதவியாளராக நியமித்தார். சுமார் பத்து ஆண்டுக் காலம், 1987ல் எம்.ஜி.ஆர் அவர்கள் மறையும்வரை, அவருடன் பணியாற்றிய பெருமை இவருக்குண்டு. பின்னர் தமிழக அரசில் பல்வேறு உயர் பதவிகளில் பணியாற்றி 2009ல் ஓய்வு பெற்றார்.

பிச்சாண்டி அவர்கள் தன் அனுபவங்களை “எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர் நினைவுகள்’’ என்ற தலைப்பில் நூலாக எழுதியிருக்கிறார். எம்.ஜி.ஆரின் அரசியல் மற்றும் திரையுலக வாழ்க்கை சம்பந்தமாக நிறைய நூல்கள் ஏற்கனவே வெளியாகியுள்ளன. ஆனால் மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட முதல்வராகப் பத்து ஆண்டுகளில் தமிழகத்தில் பொதுமக்கள் பயனடையும் வகையில் அவர் செயல்படுத்திய பல்வேறு திட்டங்களைக் கூறும் அருமையான நூல் இதுவொன்றே.

ஆசிரியருடைய நினைவாற்றலும், எழுத்து வன்மையும் வியக்கவைக்கின்றன. எம்.ஜி.ஆர் இறந்து 37 வருடங்களுக்குப் பின்னர் எழுதப்பட்ட இந்த நூல் புகழுக்காகவோ, அரசியல் லாபத்துக்காகவோ அல்ல என்பது நிதர்சனம். ஒரு மாநிலத்தின் முதல்வருடைய மனிதாபிமானத்தை சொல்வதாகவே இது இருக்கிறது. உலகத்தில் எங்கேயாவது ஒரு முதல்வர் காரில் போகும்போது செருப்பு அணியாத பெண்களின் கால்களை எண்ணி, பெண்களுக்கு செருப்பு வழங்கும் திட்டத்தை கொண்டு வருவாரா? முதல்வர் செயல்படுத்தியிருக்கிறார்.

“எனக்குள் மணக்கும் எம்.ஜி.ஆர் நினைவுகள்“ என்ற இந்த நூல் முதல் அமைச்சர் ஒருவரின் வாழ்க்கையில் ஒரு கூறை சொல்வதோடு தமிழ் நாட்டின் முக்கியமான ஒரு காலகட்டத்தின் வரலாற்றையும் ஆவணமாகத் தருகிறது. 2024ம் ஆண்டிற்கான அல்புனைவு விருதை இந்த நூலுக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



## ரவி சுப்பிரமணியன்
### கவிதைப் பரிசு

### அருகிருக்கும் தனியன்

**Poetry Award**
**Ravi Subramaniyan**

நடராஜன் – ரமணி தம்பதியரின் மூத்த மகனாக 1963ல் கும்பகோணத்தில் பிறந்தவர் ரவி சுப்பிரமணியன். அங்கிருக்கும் சரஸ்வதி பாடசாலை, நகர மேல்நிலைப்பள்ளி போன்றவறில் பள்ளிப்படிப்பையும், முதுகலை பொருளியல் படிப்பை அவ்வூரின் அரசு ஆடவர் கல்லூரியிலும் பயின்றார்.

கும்பகோணத்தின் நாகேஸ்வரன் கோவில் சன்னதியில் இவர் வீடு அமைந்ததனால், இளவயது முதலே இவர் கேட்ட தேவாரம், திருவாசகம், திராவிட இயக்க மேடைப் பேச்சுகள், இலங்கை வானொலியின் பாடல்கள் மற்றும் நிகழ்ச்சிகள், தமிழக வானொலிக-ளின் நாடகங்கள் மற்றும் உரைகள் போன்றவை இவர் இலக்கியத்தின்பால் நுழைய திட்டிவாசல் திறந்தவை. பதினோராம் வகுப்பு பயிலும் காலத்திலிருந்தே பேச்சு, நடிப்பு, எழுத்து, இசை, நடனம், பலகுரல் போன்றவற்றில் ஆர்வம் துளிர்விட, அது கல்லூரிப் படிப்பின் போது மேலும் மலர்ச்சிகொண்டு மாவட்ட மாநில தேசிய அங்கீகாரமென மொத்தம் நூற்றிப்பன்னிரண்டு பரிசுகளை, விருதுகளை அந்தக் கல்லூரி சார்பில் பெற்று படிப்பையும் முடித்திருந்தார். கல்லூரிப் படிப்பின் போதே கர்நாடக சங்கீதமும், பரதநாட்டியமும் கற்றார். மேடைகளில் பலகுரல் கலைஞராக விளங்கினார். நாடகங்களை எழுதி இயக்கி நடித்தார்.

படிப்பு முடிந்ததும் வார மற்றும் மாதாந்திர இலக்கிய இதழ்களில் கவிதைகள் எழுதத் துவங்கினார். சில இலக்கிய சிற்றிதழ்களின் ஆசிரியர் குழுவில் பங்கேற்றார். இவரது முதல் கவிதைத்தொகுதி ‘ஒப்பனை முகங்கள்’ என்ற தலைப்பில் வெளியாகி, மாநில அரசின் பரிசு பெற்று பல்கலைக் கழகங்களில் பாடமாகவும் ஆனது. அதன்பின் இதுவரை ஏழு கவிதைத் தொகுதிகள் வெளிவந்துள்ளன. கவிஞர். ஆர். ராஜகோபாலன் “That was a different season” என்ற தலைப்பில் இவரது கவிதைகளை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து புத்தகமாக வெளியிட்டுள்ளார்.

இசையமைப்பாளர் இளையராஜா உட்பட மூன்று இசையமைப்பாளர்களால் இவர் கவிதைகளில் சில பாடல்களாகியுள்ளன. நூற்றுக்கும் மேற்பட்ட பழந்தமிழ் மற்றும் நவீன கவிதைகளுக்கு மெட்டமைத்ததோடு நூற்றுக்கும் மேற்பட்ட ஆவணப்படங்களையும் இயக்கியுள்ளார். ‘தாமரை’ என்ற குறும்படத்தையும் இயக்கி வெளியிட்டுள்ளார்.

இசை சார்ந்த சில சிறுகதைகளையும் ஐந்து கட்டுரை நூல்களையும் எழுதியுள்ள இவர், தன் இலக்கியப் பணிகளுக்காக ஏராளமான விருதுகள் பெற்றதோடு, தஞ்சை தமிழ் பல்கலைக் கழகத்தின் ‘மதிப்புறு இலக்கிய ஆளுமையாக’ சில ஆண்டுகள் பணி புரிந்தார். விஜய் மற்றும் ஜெயா தொலைக்காட்சி நிறுவனங்களில் சில ஆண்டுகள் பணியாற்றி அங்கேயும் இலக்கிய நிகழ்ச்சிகளை, ஆவணப்படங்களை இயக்குதலையே முதன்மை பணியாகக்கொண்டு தொலைக்காட்சியின் இலக்கிய நிகழ்ச்சிகளுக்கு முன்னேர் ஆனார்.

புதிய சொல்லாக்கங்களும், அகமும் அரசியலும், இசையும் கோவில்களும் சார்ந்த, தனித்தன்மை கொண்டவை இவர் கவிதைகள். புதிய சாளரங்களை கவிதைகளுக்கு திறந்துவைத்த இவருடைய ‘அருகிருக்கும் தனியன்’ நூலுக்கு 2024ம் ஆண்டுக்கான கவிதை விருதை வழங்குவதில் கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் பெருமையடைகிறது.



**நியாஸா எம். ஸவாஹிர்**
**கவிதைப் பரிசு**

**நிலங்களின் வாசம்**

**Poetry Award**
**Riyaza M.Zawahir**

இலங்கையின் கிழக்குக் கரையோரத்தில் அமைந்த நிந்தாவூர் இவரது சொந்த ஊர். பயிற்றப்பட்ட சித்திர ஆசிரியையாகக் கல்முனை இமாம் கஸ்ஸாலி மகாவித்தியாலயத்தில் பணி புரிகிறார். ஓவியம் தவிர இலக்கியத்திலும் நிறைந்த ஆர்வலர். "நிலங்களின் வாசம்" நூல் இவரது முதலாவது கவிதைத் தொகுதி (வேரல் புக்ஸ், 2024).

சமூக ஊடகங்கள், பத்திரிகைகள், வானொலி, இணைய இதழ்கள் வலைத்தளங்களில் தனது கவிதைகளைத் தொடர்ந்தும் பதிவிடுகிறார் நியாஸா. கவிதைகளை குரல்வழி அளிக்கை செய்வதிலும் இவர் மிகுந்த திறன் வாய்ந்தவர்.

இவரது கவிதைகள், இயற்கையுடன் பின்னிப் பிணைந்த புதிய மானுடத்தை வேண்டி நிற்பவை. கவித்துவப் படிமங்களும் ஓவியப் படிமங்களும் பிரிவற்றுச் சிறந்து துலங்குபவை. "நியாஸா ஒரு ஓவியர். அவரின் கவிதைகளெங்கும் நிறங்களையும் சொற்களையும் பன்னீர் போலத் தெளித்திருக்கிறார். அது அர்த்தத்தின் வெளியை நீட்டி விரித்து அகலிக்கச் செய்கிறது.

"கவிஞர் - கலைஞர் - ஓவியர் என்கிற இடைவெட்டு நியாஸாவின் கவிதைகளுக்குள் இழைபின்னும் விதம் அற்புதமாய் இருக்கிறது." என்று கவிஞரும் விமரிசகருமான சிராஜ் மஷ்ஹூர் குறிப்பிடுகிறார்.

2024ம் ஆண்டின் சிறந்த கவிதைத் தொகுப்பாகத் தெரிவுசெய்யப்பட்ட 'நிலங்களின் வாசம்' நூலுக்கான விருதை நியாஸா எம். ஸவாஹிர் அவர்களுக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

---



**நீத்ரா றொட்ரிகோ**
**மொழியாக்கத்துக்கான பரிசு**

**Prison of Dreams (5 parts)**

Translation Award
**Nedra Rodrigo**

Nedra Rodrigo was born in Ilankai and emigrated to Canada during the civil war. She is a writer, academic, curator of multi arts events, community capacity builder, and currently advisor to the Board of the Tamil Community Centre project. She is the founder of the Tamil Studies Symposium in Toronto, and the bilingual, inclusive event series, The Tam Fam Lit Jam. Nedra's published translations include In the Shadow of the Sword (SAGE Yoda, 2020) and the Devakanthan quintet Prison of Dreams (Mawenzi House 2021-2024).

Her essays have appeared in Briarpatch, C Magazine, Studies in Canadian Literature, River in an Ocean: Essays on Translation (trace, 2023), and Human Rights and the Arts: Essays on Global Asia (Rowman, Littlefield and Brown, 2014). Her translations of poetry have featured in Words and Worlds, Jaggery Lit, Still We Sing: Voices on Violence Against Women (Dhauli Books, 2021), Human Rights and the Arts in Global Asia (Rowman, Littlefield and Brown, 2014), and Out of Sri Lanka (Bloodaxe Books, 2023).

She co-edited the anthology Tamil Terrains: Poems, Translations, Reflections (trace, 2025) with Geetha Sukumaran. Her draft translation of Kuna Kaviyazhakan's novel The Forest that took Poison was shortlisted for the inaugural Global Humanities Translation Prize. Her translation of Rashmy's Songs in a Time of Confinement (trace, 2026) received the inaugural PEN Translates x SALT award, given by English PEN in collaboration with South Asian Literature in Translation, University of Chicago.

2024ம் ஆண்டின் மொழியாக்கத்திற்கான விருதை, தேவகாந்தனின் கனவுச்சிறை நாவலின் ஆங்கில மொழியாக்கமான Prison of Dreams (5 parts) இற்காக நீத்ரா றொட்ரிகோ அவர்களுக்கு வழங்குவதில் தமிழ் இலக்கியத் தோட்டம் மிகுந்த மகிழ்ச்சி அடைகிறது.

## கனடிய தமிழ் இலக்கியத் தோட்டம் • இயல் விருது பெற்றோர்



**2001ம் ஆண்டு இயல் விருது**

கவிதைகள், நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், விமர்சனங்கள் என்று கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக படைத்து தமிழ் இலக்கியத்தின் முன்னோடிகளில் ஒருவராக நின்று வழிநடத்தி தமிழ் பணியாற்றிய திரு சுந்தர ராமசாமி அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2002 ம் ஆண்டு இயல் விருது**

மணிக்கொடி பரம்பரையைச் சேர்ந்தவரும், மூத்த இலக்கியவாதியும், கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தீவிர தமிழ் தொண்டாற்றி வந்தவருமான திரு கே. கணேஸ் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2003ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியம், நாடகம், இசை சினிமா, சிற்பம், ஓவியம் ஆகிய பல துறை எழுத்துக்களில் தீவிரமாக இயங்கிவந்த திரு வெங்கட் சாமிநாதன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2004ம் ஆண்டு இயல் விருது**

ஈழத்து நூற்பதிப்பு துறையில் முன்னெப்பொழுதும் இல்லாத வகையில் கடந்த முப்பது ஆண்டுகளுக்கு மேலாக தீவிரமாக இயங்கி தமிழுக்கு பெரும் தொண்டாற்றிவரும் திரு இ. பத்மநாப ஐயருக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2005ம் ஆண்டு இயல் விருது**

கடந்த பல ஆண்டுகளாக பழம் தமிழ் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்தவரும், கலிஃபோர்னியா பல்கலைக்கழகத்தில் தமிழ்துறை தொடங்கி அதில் பேராசிரியராக பணியாற்றியவரும், 2004ல் தமிழ் செம்மொழியாக அறிவிக்கப்பட்டதற்கு காரணமானவருமான திரு ஜோர்ஜ் எல் ஹார்ட்டுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2006ம் ஆண்டு இயல் விருது**

தமிழ் நாடகக் கலைக்காகப் பல ஆண்டுகள் பாடுபட்டு அதை உலக மட்டத்துக்கு உயர்த்தி , நாடகத்துக்கும், தமிழுக்கும், ஈழத்துக்கும் புகழ் சேர்த்துவரும் திரு தாசீசியஸ் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2007ம் ஆண்டு இயல் விருது**

கடந்த இருபது ஆண்டுகளாக நவீன தமிழ் புனைகதைகள், கவிதைகள் ஆகியவற்றை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்து வெளியிட்டு தமிழின் சிறப்பை உலகறியச் செய்துவரும் ***திருமதி லக்ஷ்மி ஹோம்ஸ்ரோம்*** அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கியச் சேவையைப் பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2008ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது வருடங்களாக தமிழ் எழுத்துலகில் மட்டுமன்றி தன் செயல்பாட்டை பெண்கள் வாழ்க்கையின் பல்வேறு துறைகளுக்கும் விரித்து தன் பதிவுகளை இலக்கியத்துக்கும் அப்பால் கடத்திய அம்பை அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2009ம் ஆண்டு இயல் விருது**

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தீவிர சிந்தனையாளராகவும், கோட்பாட்டாளராகவும், திறனாய்வாளராகவும் இயங்கி, நவீன தமிழ் இலக்கியங்களை மார்க்ஸிய நோக்கில் ஆராய்ந்த கோவை ஞானி என்று அழைக்கப்படும் கி. பழனிச்சாமி அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2009ம் ஆண்டு இயல் விருது**

கடந்த ஐம்பது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் எழுத்துக்களின் தோற்றமும் வளர்ச்சியும் குறித்து இவர் நடத்திய ஆராய்ச்சிகளுக்காகவும், தொல் தமிழ் குறித்து தீர்க்கமான முடிவுகளை எட்ட உதவியிருக்கும் கல்வெட்டு ஆராய்ச்சிகளுக்காகவும் திரு ஐராவதம் மகாதேவன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2010ம் ஆண்டு இயல் விருது**

கடந்த அறுபது ஆண்டுகளுக்கு மேலாக தமிழ் இலக்கியத்தின் பல துறைகளில் பங்களித்தவரும், மூத்த இலக்கியவாதியும், ஈழத்து தமிழ் இலக்கியத்தை உலகளாவிப் பரப்புவதில் முன்னிற்பவருமான திரு எஸ்.பொன்னுத்துரை அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2011ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 25 ஆண்டுகளுக்கு மேலாக பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கி, புனைவு இலக்கியத்தின் புதிய வாசல்களைத் திறந்து வாசகர்களுக்கு மகத்தான தரிசனங்களை அளித்தவரும், தமிழுக்கு தன்னை அர்ப்பணித்தவருமான திரு எஸ்.ராமகிருஷ்ணன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2012ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக பல இலக்கிய வகைப்பாடுகளில் இயங்கி, புனைவு இலக்கியத்தின் புதியவாசல்களைத் திறந்து வாசகர்களுக்கு மகத்தான தரிசனங்களை அளித்தவரும், தமிழுக்கு தன்னை அர்ப்பணித்தவருமான திரு நாஞ்சில் நாடன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் தமிழ் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2013ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக சிறுகதைகள், கட்டுரைகள், சுயசரிதக் குறிப்புகள் என எழுதியதுடன் "மல்லிகை" என்னும் இலக்கியச் சிற்றிதழை அரைநூற்றாண்டு காலமாக தொடர்ந்து நடாத்தி சாதனை புரிந்திருக்கிறார் திரு. டொமினிக் ஜீவா. இவரது படைப்புகளும், பத்திரிகையும் அறிஞர்களதும் கல்வியா-ளர்களதும் தேடுதளமாக விளங்கி வருகின்றன. தமிழுக்கு தன்னை அர்ப்பணித்து இவர் ஆற்றிய வாழ்நாள் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.



**2013ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 40 ஆண்டுகளுக்கு மேலாக மக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படும் விதமாக சுற்றுச்சூழல் பற்றியும், தமிழ் சினிமா வரலாறு பற்றியும் தமிழிலும், ஆங்கிலத்திலும் கட்டுரைகள் எழுதியதோடு முக்கியமான மொழிபெயர்ப்புகளும் செய்தவர் பல நூல்களை வெளியிட்டவர் என்ற வகையில் திரு தியோடர் பாஸ்கரன் அவர்களுக்கு அவருடைய வாழ்நாள் இலக்கிய சேவையை பாராட்டி இந்த விருது வழங்கப்பட்டது.




**2014ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 30 ஆண்டுகளுக்கு மேலாக திரு ஜெயமோகன் தமிழில் பல் துறைகளிலும் தனது எழுத்தின் மூலம் ஆழமான முத்திரையை பதித்திருக்கிறார். 80 நூல்களுக்கு மேல் வெளியிட்ட இவர் தொடர்ந்து நாடு நாடாக பயணம் செய்து இலக்கிய உரைகள் ஆற்றிவருகிறார். இவருடைய தமிழ் இலக்கிய சாதனைக்காக 2014ம் ஆண்டு இயல் விருது வழங்கப்பட்டது.



**2015ம் ஆண்டு இயல் விருது**

2003ம் ஆண்டிலேயே தமிழ் விக்கிப்பீடியா செயற்பாட்டில் பங்களிக்கத் தொடங்கினார் திரு இ. மயூரநாதன். இவர் தொடர்ந்து 13 வருடங்கள் அரும்பாடுபட்டு பங்களிப்பாளர் குழுமத்தை உருவாக்கி வெற்றியுடன் நடத்தினார். தமிழ் விக்கிப்பீடியாவை எதிர்காலத் தமிழ் மேம்படுத்தலுக்கான நம்பிக்கையாக வளர்த்தெடுத்த இவருடைய அளப்பரிய சாதனையை பாராட்டி 2015ம் ஆண்டு இயல் விருது இவருக்கு வழங்கப்பட்டது.



**2016ம் ஆண்டு இயல் விருது**

தமிழ் இலக்கிய உலகில் கடந்த 40 வருடங்களுக்கும் மேலாக, தனது இலக்கியப் பணிகளில் சமரசம் செய்து கொள்ளாமல் இயங்கிக் கொண்டிருக்கும் திரு. சுகுமாரனுக்கு, 2016-ஆம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.



**2017ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 50 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதை, கவிதை, கட்டுரை, நாவல் என தொடர்ந்து இயங்கி வருபவரும், இலக்கியவாதிகளாலும், வாசகர்களாலும் பெரிதும் மதிக்கப்படுபவருமான வண்ணதாசன் அவர்களுக்கு, 2017-ஆம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.




**2018ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 25 ஆண்டுகளுக்கும் மேலாக சிறுகதை, கட்டுரை, நாவல் என தொடர்ந்து இயங்கி வருபவரும், இலக்கியவாதிகளாலும், வாசகர்களாலும் பெரிதும் கொண்டாடப்படுபவருமான இமையம் அவர்களுக்கு, 2018-ஆம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.



**2021ம் ஆண்டு இயல் விருது**

கடந்த நாற்பது ஆண்டுகளாக வரலாறு, மொழி, இலக்கியம், பண்பாடு, அரசியல், சமூகம் என பல்வேறு துறைகளில் ஆய்வு செய்தும், எழுதியும் வரும் பேராசிரியர் ஆ. இரா. வெங்கடாசலபதி அவர்களுக்கு 2021ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.



**2022ம் ஆண்டு இயல் விருது**

எண்பதுகளில் எழுதத் தொடங்கி இன்றுவரை தொடர்ந்து கவிதைகள், சிறுகதைகள், நாவல்கள், குறுநாவல்கள், கட்டுரைத் தொகுப்புகள், சிறுவர் இலக்கியம், மொழிபெயர்ப்புகள் என ஓயாது செயற்படும் பாவண்ணன் அவர்களுக்கு 2022ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.




**2022ம் ஆண்டு இயல் விருது**

கடந்த ஐம்பது ஆண்டுகளாக இலக்கியத்தில் அதி ஈடுபாட்டுடன் சிறுகதைகள், பயண இலக்கியங்கள், கட்டுரைத் தொகுதிகள், நேர்காணல்கள் என இயங்கிவரும் படைப்பிலக்கியவாதியும், ஊடகவியலாளருமான லெ. முருகபூபதி அவர்களுக்கு 2022ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்பட்டது.




**2023ம் ஆண்டு இயல் விருது**

இந்தியவியல், திராவிடவியல், சிந்துவெளி ஆய்வாளரான ஆர்.பாலகிருஷ்ணன் அவர்களைப் பாராட்டி கனடா தமிழ் இலக்கியத் தோட்டம் அவருக்கு 2023ம் ஆண்டுக்கான வாழ்நாள் தமிழ் இலக்கிய சாதனையான இயல் விருது வழங்கப்பட்டது.



**2024ம் ஆண்டு இயல் விருது**

கடந்த பல ஆண்டுகளாக பேர்மிங்ஹம் பல்கலைக்கழகத்தில் ஆய்வுகள் செய்து, பல நூல்களை ஆங்கிலத்திலும், தமிழிலும் எழுதிய சச்சிதானந்தன் சுகிர்தராஜா அவர்களுக்கு 2024ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.



**2024ம் ஆண்டு இயல் விருது**

கடந்த 35 ஆண்டுகளுக்கு மேலாக, நவீனத் தமிழ் இலக்கியப் பரப்பில் தீவிரமாக இயங்கி நாவல்கள், சிறுகதைகள், கட்டுரைகள், மொழிபெயர்ப்புகள் எனத் தொடர்ந்து படைத்துவரும் யுவன் சந்திரசேகர் அவர்களுக்கு 2024ம் ஆண்டுக்கான இயல் விருது வழங்கப்படுகிறது.

25 ஆவது ஆண்டு · 25 th Anniversary

தமிழ் இலக்கியத் தோட்டம்
Tamil Literary Garden

## Donations

Vaithehi, Balamurugan and Apsara
Dr.Vijay Janakiraman and Mrs.Mallika Janakiraman
Manuel Jesudasan
Appadurai Muttulingam
Thirumurthi Ranganathan
Dr.S. Sambandam and Mrs.Viji Sambandam
Dr.Thushiyanthy Sriharan and Dr. Sriharan Sinnadurai
Dr. Cheran Rudhramoorthy
Dr. Shan Shanmugavadivel
Roy Ratnavel
Margie and Vincent de Paul
Dr. G.M. Selvakone Memorial Fund
Sivan Ilangko
Udhayakumari Arul
Andi Giri (Softsquare)
Dr. Sukanthy Bream
Dr. M.A.Sanjayan, Andrea and Sahana
Vivek Subramaniam
V.Sornalingam
Lakshman Dhasarathan

*With the Best Compliments Of*

# Yarlmetal Fabrications Inc



Vyramuthu Sornalingam, C.E.O

**51 Northcolt Crescent, Markham, ON. L3R 6P2**

**Tel: 416 297 9013**
**Fax: 416 297 9513**

*With the Best Compliments Of*

HOMELIFE
HIGHER STANDARDS

HomeLife/GTA Realty Inc.
Brokerage

Tel: 416 321 6969
Tel: 905 712 2666

5215, Finch Ave. E, Suite #203, Scarborough
145 Traders blvd. Suite #28, Mississauga

Raja Mahendran, P.Eng
Broker/ Owner



**Dr. Shan A. Shanmugavadivel & Associates**

• Orthodontics • Implants • Cerec Crowns

**டாக்டர் அ. சண்முகவடிவேல்**

பற்களை ஒழுங்கு செய்தல், இம்பிளான்ற் சிகிச்சை,
ஆகியவற்றில் பல வருட அனுபவமுள்ள
குடும்ப பல் வைத்தியர்.

**RAINBOW VILLAGE DENTAL OFFICE**

**2466 Eglinton Avenue East, Unit 7**
**Scarborough, ON. M1K 5J8**
**Monday to Saturday**
**Near Kennedy Subway**
**Tel 416 266 5161**




விரைவில்
தமிழில்
வெளிவருகிறது!

தொடர்புகளுக்கு:
contact@RoyRatnavel.com



An incredible immigrant story about a prominent Canadian Tamil who fled torture and imprisonment and arrived in Canada with an empty pocket and full of hope. Then he rose from the mailroom to the executive suite of the country's largest independent asset management company.

Prisoner #1056 was published by Penguin Random House Canada on April 18, 2023. The book quickly became a #1 national bestseller in Canada and earned a bronze medal for best business memoir at the Axiom Book Awards in the United States.

This book speaks not only to the Canadian immigrant experience, but to the trials and tribulations of millions of the global Tamil community.

This narrative transcends the immigrant success story; it appeals to a broader audience beyond the Tamil community. It's a powerful testament to the resilience of the human spirit and goes beyond a personal memoir. It is a tale about how to craft one's mindset and strongly advocates that while we may not control where we begin, our destiny is ours to shape.


உங்களுக்குத் தெரியும்,
நம்பிக்கையுடனான தரமான சேவைகள்..
தகுதியான வெற்றிகளுக்கான
தரமான தெரிவு
PROMAR Ltd.
AWARDS & PROMOTIONS
நகரின் முன்னணித் தமிழர் நிறுவனம்
இப்பொழுது
வீடு விற்பனைத்
துறையிலும்
www.promarawards.com 416-291 2344